பிஸ்மில்லாஹி

நாகூராண்டவர் தியானமென்னும்

# ஷாஹுல் ஹமீது பேரில்

# சதாமிர்தக் கீதம்.

இராமநாதபுரம் ஸமஸ்தான வித்வக் கோத்ரம்

முதுகுளத்தூர்

பி. அ. பிச்சக் கவிராயர்

புத்திரன் அமிர்தகவி

பி. அம்மைநாதப் பாவலரால்

இயற்றியதை

புத்தக வியாபாரம்

சி. நா. மு. வைத்தியலிங்கம் படையாக்ஷியார்

விருப்பத்தின்படி

டைடில் பேஜ் மாத்திரம்

"அமிர்த குணபோதினி" அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

302, தங்கசாலை வீதி, சென்னை.

1930

Q7:417
N30

வயதை வளர்க்கும் கல்பம்! வியாதியைப் போக்கும் அமிர்தம்!

# வஜ்ர கல்ப காபி தூள்

**மதுமேகம், நீரிழிவு, நீர்சுருக்கு, பித்தகாசம், க்ஷயம் முதலிய ரோகங்களைக் கண்டிக்கக் கூடியது.**

சாதாரண காபி, தேயிலை முதலியவைகளை உபயோகிப்பதால் அதிக உஷ்ணத்தினால்திரேகத்திலுள்ள ஜீவதாதுக்களை பலஹீனப் படுத்தி நாளடைவில் மேல்சொல்லிய கொடிய ரோகங்களை உண்டாக்குகிறதென்பது சகலருக்கும் தெரிந்த விஷயம். இவ்வித வியாதிகள் அணுகாமல் எப்பொழுதும் திடகாத்திரமாய் நல்ல தாது வலுவுடன் உற்சாகத்தைத் தரக்கூடியவிதமாய் நமது வஜ்ரகல்பகாபிதூள் மஹரிஷிகளாலும், முன்னோர்களாலும் கையாண்டுவந்த சரக்குகளைக் கொண்டு பிரசித்த பண்டிதர்ஒருவரால் தயாரிக்கப்பட்டது. சாப்பிட நல்ல மணமாயிருக்கும். கசப்பு,துவர்ப்பு, வெகுட்டல் இவை ஒன்றும் இராது. 40-நாள் டின் விலை ரூ. 1. தபால் செலவு வேறு.

**டி. ஆர். விக்டர் அண்டு கம்பெனி,**

தபாற் பெட்டி நெ. 164, மதராஸ்.

---

விவேகம்! விநோதம்! விகடம்! விசித்திரம்! வித்வத்வம்!
அனுபவம்! அற்புதம்! ஆச்சர்யம்! ஆனந்தம்!

# அமிர்த குணபோதினி

## உன்னதமான நூதன தமிழ் மாதப் பத்திரிகை.

இதுபோன்ற நவீன மாதாந்தர ஸஞ்சிகை இதுவரை தமிழில் வெளிவந்ததில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கில மாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகின்றது. எல்லாம் கருத்து, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய செவிக்கினிய அலங்கார வசனமழை. 64—பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிகை. தமிழ் நாட்டில் இந்த ஸஞ்சிகையின் அமைப்புக்கு நிகராக வேறெந்த ஸஞ்சிகையும் கிடையாது. 31,000 சந்தாதாரர்கள் உள்ளது. மாதிரி காபி இனாம்.

வருட சந்தா உள்நாடு ரூபா 1. வெளிநாடு ரூபா 1—8—0

**தி. இராஜகோபால் முதலியார்,**

அமிர்த குணபோதினி ஆபீஸ்,

302, தங்கசாலை வீதி, மின்ட் பில்டிங் போஸ்டு, சென்னை.

பிஸ்மில்லாஹி.

நாகூராண்டவர் தியான மென்னும்

ஷாஹுல் ஹமீது

# சதாமிர்தகீதம்.

வெண்பா.

அருமறைகள் புகழ் நாகூராண்டவர்முன் செய்தசில
பெருமையதை செந்தமிழால் பேசுதற்கு—நருமலர்சூழ்
நாதாப்பரம்பொருளே நாவில்நிதம் யான்றுதிக்க
போதானந்தங் கொடுத்துப்போ.

இராகம் கல்யாணி தாளம் ரூபகம்.

1 எத்தை கண்டு நீ என்ற மெட்டு.

பல்லவி.

பக்திக்கென் றுயான் பாரினில்துணிவேன் துதி
பாடி தேடி பாடி தேடி பக்தி

அநுபல்லவி.

சித்திபெருந்திரு ஜெம்மல் முஹைறயதீன்
செய்யதுஹப்துல் ஷாதிரெனும் புண்ணியர்
தினுக்கே தருந்தேனுக்கே
ஜெயமீனுக்கே யீமானுக்கே பக்தி

சரணம்.

ஆரிருவாகம மொன்றாய்பூஜித்தே
அருமைநிறைந்த தாலே ஆலே
வாருதிகறையில் சிறந்தநாகூர்
வசிக்கும்கீர்த்தி யாலே ஆலே
கோரியதண்டமிழ் தொண்டன் அம்மைநாதன்
கொண்டாடும்சிந்தனை காண்டாடும் சந்தண
கூட்டுக்கே அன்பர் கோஷ்டிக்கே
இந்தநாட்டுக்கே இன்பவீட்டுக்கே பக்தி

இராகம்-தேசிகம் தாளம்- ஆதி.

2 வேலாயுதக்குமரா என்ற மெட்டு.

பல்லவி.

ஆதாரமேஎனக்குன் பாதாரமே ஆ

அநுபல்லவி

ஆண்டவாஉலக தனைவர் துதி
பூண்டவாமகுடாதிபர் நம்பிடும்பதி ஆ

சரணம்.

போதாக் குருவே
பொன்னூர்ச மாதிருவே
நத்திப்பமுக்திக்கும் பக்திக்கெனசித்திக்கும்பதி ஆ

தொகையறு.

வருடத்துக்கோர்முறைதவராமல் கந்தூரி
வருங்கொடியூர்கோலமோ
மகம்மதிய அலிமார்கள் தர்காமுன்வாசலில்
வழுத்துங்கொர்வான்வேதமே

சரணத் தொடர்ச்சி.

நன்னாட்டில் கீர்த்திபெரும்
நாகூரிலே வளரும்
மன்னுவி ஞேதமுரும்
மதிமங்களஜோதிக்கும்பொதுவந்தனையாதிக்கும்பதி ஆ

தொகையறு.

பல்வளமிகுந்திடும் மாணிக்கப்பூரிலே
பண்பாயுதித்த யோகா
பண்ணவர்புகழ்ந்திடும் பாத்துமாமகிழ்ந்தின்று
பாதுகாத்திட்டயோகா

சரணத்தொடர்ச்சி.

அம்மைநாதன் றமிழே
ஆதரிப்பாய் பொருளே
வம்பாகுமோ யிருளே
வஞ்சந்தவிர் பஞ்சக்கொடி
கொஞ்சுந்தவ மிஞ்சுங்குணபதி ஆ

இராகம் காப்பி தாளம்-ஆதி.

### 3 தசரதராஜகுமாரா என்ற மெட்டு.

கண்ணிகள்.

மணங்கமழ் வேத நாகூரா நபிபேரா
உபகாரா அதிதீரா மண

1 குணங்கமழ்காதர்மொய் தீனெனும்ஒலியே
குறைவகற்றுதநேனே மறைதருப்புலியே
வணங்குந்தர்காவை நாட மாசெனுங்கலியே
மைந்தனேயனு காமல்தானே
செய்யுங்கோனே தொழுதேனே எஜமானேமண

2 வாரிதிகரையில்வாழ் வள்ளலேநாதா
வஞ்சகமோஎன்மீது கார்க்கஒண்ணாதா
தாரணியோர்கொண்டாடும் தாமரைப்பாதா
தாயகமேநிறைந்த வாசா பவநாசா
எங்கள்நேசா பிரகாசா மண

3 கப்பல்பிறையாணியை கரைசேர்த்தயோகா
கனவிலுமைமறவேன் கருணையந்தியாகா
துர்ப்போதரைச்சினந்து துலைந்திடுந்தியாகா
தொண்டன் அம்மை நாதனின்கீதா
தவபோதா கிருபைதாதா அருள்வேதா மண

இராகம் பியாக், தாளம்-யேகம்.

### 4 செந்தேன் பஞ்சாமுர் தப்பால் என்ற மெட்டு.

பல்லவி.

தந்தோம் நெஞ்சாரத்துதி
சர்தாரே நாகூர்ப்பதி
சார்வோம்சதாகமழ்ஜோதி ஜோதி
ஜோதி ஜோ சமாதி தந்

பல்லவிமகுடம்.

சகலமுந்தவ மகிழ்வரம் பொத்தினத் தந்
கார்மகிழும்கொடியூர்வலப் பூமானேஎண்ணித் தந்
தங்கத்துரைஎன்றைக்கும்
சங்கத்தவர் இன்றைக்கும்நம்பித் தந்

தாரணிமீதினிலேமிடி
யேயகலதிருசேவடிகண்டு ... தந்

தொகையரு.

மாதாசிபாத்துமா மாதவத்தில்
மாணிக்கப்பூரிலேபிறந்து
வாய்ந்தநல்மங்க நபிபேரரேமாக்ஷிமை
மருதாவிலே சிறந்து

பாட்டு.

சாதித்தீர்யோகசிந்தனை
சாரசம்ரம பேரின்பத்தமிழ்தனைச் ... சாதி
நீதஞ்சேர்மதி அம்மைநாதன்
நெஞ்சத்தி லிசைத்தப்போது
வஞ்சந்தவிர் பஞ்சத்கமுற்றும் ... தந்

இராகம் புன்னாகவராளி, தாளம்-ஆதி.

5 நாதசங்கீதப்பொன் என்ற மெட்டு.

கண்ணிகள்.

1 கருணைதவழ்ந்திலங்கும் ... நாகூரா
கடயனைக் கார்த்தருள்செய் ... காதர்மீரா
அருமைஎனக்குதவும் ... அதிதீரா
ஆதாரமற்றவர் ... கட்க்குபகாரா
அண்டினேனே!—அண்டினேனே!!
அரவிந்தமாபதத்தை—அண்டினேனே! ... கருணை

2 தேனும்பிரகாசிக்கும் ... மணிமார்பா
திருமாதவர் கொண்டாடும் ... ஜெக தீபா
ஞானமிகச்சிறந்த ... நயபூபா
நாயகமாய்நிறைந்த ... பிரதாபா
நம்பினேனே!—நம்பினேனே!!
நானிலமீதுஉம்மை—நம்பினேனே ... கருணை

3 கப்பல்பிறையாணியைக் ... கரைசேர்த்து
கார்த்திரே யேழைகளின் ... முகம்பார்த்து
எப்போதுமே அடியார் ... வினைதீர்த்து
இஸ்லாங்குலத்தவர்க்கோ ... மதிகோர்த்து

இசைந்திரே!—இசைந்திரே
எங்கள்குலக்கொழுந்தாய்—இசைந்திரே!

4 சந்தணக்குடங்கமழ் சுதாரே
தண்டமிழ் அம்மை நாதன் துதிநேரே
வந்தாயிரஞ்சனங்கள் தொழுவாரே
வள்ளலே உன்மகிமை வெநசீரே

மரந்திரோ!—மரந்திரோ
மக்களையாதரிக்க—மரந்திரோ!

இராகம் மால்கோஸ், தாளம்-யேகம்.

6 தாயிடத்தில் அன்பில்லார் என்ற மெட்டு,

கண்ணிகள்.

அன்னை தந்தை குருவும் நீயே
ஆண்டவனே, அ
உன்னையன்றிவேரு வுதவிசெய்வதாரு
பொன்னூர்பதந் தருவீர்பூரணரே அ
கடற்கரையூரா கஞ்சசவாய்மீரா
அடுத்தவர்க்காவி யான ஆதாரரே அ
நெய்னூரின்போர நித்யமுபகாரா
வையகத்தில்கீர்த்திவாய்த்த மன்னவரே அ
தண்டமிழ்ச்சங்கீதம் தாகப்ரசாதம்
தொண்டன் அம்மைநாதன்போற்றும்தோதாகவே அ

இராகம் தேசிகதோடி தாளம்-ஆதி.

7 ஆண்டிபண்டாரம் என்ற மெட்டு.

கண்ணிகள்.

பார்க்கமோக்ஷமே யார்க்கும்
பேர்க்கடாக்ஷமே பா

தீராதவல் வினையை
தீர்க்கும்பரா பரத்தான்
பாரோங்கும் ஷாகுல்ஹமீத்
பண்மிகுந்த பொன்னடியை பா

கந்தநபி நாயகத்தான்
கஞ்சமலர் மாமுகத்தான்
வந்தவரை யாதரித்து
வரமுகந்த சீரொளியை பா

யேகாந்த மாய்விளங்கும்
எண்ணிரந்த மாடப்புரா
வாகாகவே யமர்ந்த
மங்களமா மாக்ஷியதை பா

தோகை மயிலிரகு
தோரணத்தான் கீர்த்திபெரும்
நாகூர்தனில் வளரும்
நாதனுன ஆண்டவரை பா

தொண்டனம்மை நாதன்சதா
ஸ்தோத்தரிக்கும் கீர்த்தனையால்
கண்டோர் மனங்குளிரும்
காக்ஷிமேவும் நாயகரை பா

இராகம் கானடா-தாளம் ஆதி.

8 குன்றில் விளங்குகுகா என்ற மெட்டு.

பல்லவி.

நாகூரில்வாழும் நாதா திரு நா
ஜெயதிரு நா திகளொடுஜெயதிரு நா
சிறந்தொழுவனுதினந்திகளொடுஜெயதிரு நா

அநுபல்லவி.

நலிந்தேன் மெலிந்தேன்பதந்தா
வெனதிகளொடு ஜெயதிரு நா

சரணம்.

1 மகிபரெனுங்கோனே
மகிழும்எஜமானே
மாராமல்சீராஎன்நேராயருள்
திகளொடுஜெயதிரு நா

2 ஆவிதரும் லோலா
அன்பர்க்கனுகூலா
ஆதாரம் நீதா தர்போதா வெனத்
திகளொடு ஜெயதிரு நா
3 கந்தங்கமழ்மேனி
கருணை தரும்கியானி
காவாமெய்த்தேவா நீவாவாவெனத்
திகளொடு ஜெயதிரு நா
4 அம்மைநாதன் கீதா
அனைவர்தொழுந்தாதா
ஆதிசெஞ்ஜோதி சொல்பாதிபிறை
திகளொடு ஜெயதிரு நா

இராகம் சுருட்டு, தாளம்: ஆதி,

9 தயவில்லாத தென்னவஞ்சம் என்றமெட்டு.

பல்லவி.

விருப்பமேவும் கடலூரா எங்கும்
விளங்குங்காதர்மீரா மந்திரா விரு

பல்லவி|மகுடம்.

விந்தைமிகுத்த சுகந்தபதம்தா
வந்தருந்ததி மூந்தவந்தா விரு

அனுபல்லவி.

மருப்படாத தங்கத் தேகா இனி
வாதுசெய்வது நீதியாகுமோ
மகிமைப்பெருகும் மிருசர்குணரே
மகிழ்ந்தகம் புகழ்ந்திடும் மகிபரே விரு

சரணம்,

அன்பரே யுன்னையன்றி யாரெனக் குதவி
ஆதாரமாகவந்து அளித்திடும்பதவி
அண்ணல்ஹமீதொலி நன்னீதா திரு
ஆகியானசெஞ் ஜோதியானவா
துந்தரர்க்கினிய சுந்தரர்க்கனியே
அம்மை நாதன் தண்டமிழ்
அணிந்தினங்குணந் தரும்படிமிசை விரு

இராகம் செஞ்சுருட்டி தாளம், ஆதி.

10. சுதேசியத்தால் என்ற மெட்டு

கண்ணிகள்.

காசினியோர்புகழ் பேசிடும் நாகூர்
பள்ளிவாசலே பாருங்
கண்டுளமேமகிழ் கொண்டிடத்தாவா
வெள்ளிபூசலே
மாசற ஓங்கிய ஆண்டவர்தர்கா
முற்றும் மேலே எங்கும்
மாகதசித்திர பத்திக்குளோப்பார் வர்னத்தாலே
வன்னன் தஞ்சைப்பதிமகராஜன்
வயிற்றுவலியினைத் தீர்த்தார்
இன்னும்யேழைகள் துன்பமகற்றி
இஸ்லாமதமெனக் கோர்த்தார்
வின்னமிலாமலே ஐந்துமனவரா
மீதில்ஜெயக்கொடி சேர்த்தார்
விருப்புமடியவர் வியாளன் பூஜித
மேவியனவரைக் கார்த்தார்
வேதம்சேர் மாதங்கம்
ஆதம் என்றோதுங்கள் தீன் தீன் தீன் பரவிய கா
ஆனந்தமாகவேமக்காம் புகுந்தவர்
அனுதினங் கோர்வாஜோதி
அம்மவாசை மூன்று நாளில்
கொடிகள் பாப்பிய நீதி
காணும்படிக்கொரு பெரியவராகம
கந்தூரி என்னும்பிரீதி
காரணமாகிய ஷாகுல்ஹமீதொலி
கருணையளிப்பர் சமாதி
நானுவிதச்செகஜோதி அம்மை
நாதன்றமிழ் பெருங்கியாதி
நாடிப்புகழ்பெற நீடித்திகளுர
கூடித்துதியொடு தேடித்தினமுர
தீன், தீன், தீன், பரவிய காசி
ஷாஹுல் ஹமீது சதாமிர்தகீதம் முற்றிற்று.

சென்னை திருவொற்றியூர் கலைமகள் விலாசம் அச்சுக்கூடம்.